**13.02.2026 <u>அசல் வழக்கு எண்.109/2018</u> Starting Time : 12.52 p.m.**

**<u>வா.சா.1</u> திரு. முனுசாமி த/பெ. பச்சையப்பன்**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

**1**). வட்டாட்சியர் அலுவலகத்தில் எனது தாயார் எனது தகப்பனாரின் மனைவி அல்ல என்று கூறி எனது வாரிசு மனுவை நிராகரித்தார்கள் என்றால் சரியல்ல, நான் மனு கொடுத்ததற்கு ரசீது கொடுத்தார்கள், நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி கூறினார்கள். 13.11.1991ல் ஒரு அறிவிப்பு அனுப்பியதாக நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளபட்சத்தில், மேற்படி அறிவிப்பு யார் யாருக்கு அனுப்பியது என்றால் வழக்கறிஞர் இராஜமூர்த்தி அவர்கள் எனக்கு அனுப்பினார்கள். அப்படி ஒரு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அழகேசன் அவரது அப்பாவிற்கு அவர் இரண்டாவது மனைவியின் மகன் என்று எந்த காலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**2**). எனது அம்மாவிற்கும் பச்சையப்பனுக்கும் எந்தவொரு உறவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிறப்பு சான்றில் தகப்பனார் பெயர் என்ன என்று குறிப்பிட்டுள்ளது என்றால் பச்சையப்பன் என்று குறிப்பிட்டுள்ளது. மேற்படி பச்சையப்பன் யார் என்று அந்த சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் அந்த விவரங்கள் சான்றிதழில் குறிப்பிட வாய்ப்பு இல்லை. என்னுடன் பிறந்த சகோதர சகோதரிகளின் பிறப்பு சான்றிதழ் என்ன ஆனது என்றால் மலேசியாவில் உள்ளது. நான் யாருடைய மகன் என்ற விவரம் கொவளை கிராமத்தில் உள்ளவர்களுக்கு தெரியாது என்றும், மலேசியாவில் உள்ள எனது குடும்பத்தினருக்கும் மட்டும் தான் தெரியும் என்றால் சரியல்ல, கொவளை கிராமத்தில் விசாரித்தால் சொல்வார்கள்.

**3**). வருவாய் துறையினர் விசாரணை செய்து நாங்கள் பச்சையப்பனின் வாரிசு அல்ல என்பதால் தான் மனுவினை நிராகரித்தார்கள் என்றால் சரியல்ல, இரண்டு மனைவி உள்ளனர் என காரணம் காட்டி தான் நிராகரித்தார்கள். பச்சையப்பன் மற்றும் அவரது அப்பா, தாத்தா அனைவரும் தலைமுறை தலைமுறையாக கொவளை கிராமத்தில் தான் இருந்து வந்தார்கள்

என்றால் சரிதான். பச்சையப்பன் 1 முதல் 4 பிரதிவாதிகளையும், மற்றொரு மகள் அமுதா, அவரது தாயார் மற்றும் மனைவியையும் சில காலம் விட்டுவிட்டு மலேசியாவிற்கு சென்று வசித்து வந்தார் என்றால் சரியல்ல, அவரது தாயாரை மட்டும் தான் விட்டு விட்டு சென்று திரும்பவும் வந்துவிட்டார். பச்சையப்பன் அவர் இறக்கும் சமயத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் உடன் தான் இருந்து வந்து கொவளை கிராமத்தில் காலமாகிவிட்டார் என்றால் கொவளை கிராமத்தில் தான் காலமானார், ஆனால் மேற்படி பிரதிவாதிகள் சொத்தை எழுதிக் கொடுக்க சொன்னார்கள், அவர் எழுதிக்கொடுக்காததால் அவர் தனியாக இருந்து வந்து காலமாகிவிட்டார்.

**4**). 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அமுதா ஆகியோர்களின் தாயாரான முனியம்மாள் மட்டும் தான் பச்சையப்பனின் மனைவி என்றால் சரியல்ல, எனது தாயார் பச்சையப்பனின் மனைவி ஆவார். அமுதாவை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அமுதா இறந்துவிட்டார் அதனால் சேர்க்கவில்லை. அமுதாவிற்கு கணவர் மற்றும் குழந்தைகள் இருக்கிறார்கள் என்றால் இருக்கிறார்கள். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

**5**). என்னுடன் பிறந்தவர்களான சொர்ணம், எல்லப்பன், மண்ணபெருமாள், ஆறுமுகம் ஆகியோர்களை தவிர வேறு யாரும் இருக்கிறார்களா என்றால் இல்லை. அவர்கள் யாரும் இந்த வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் அவர்களுக்காகவும் சேர்த்து தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நான்கு பேருக்கும் இந்த வழக்கில் உடன்பாடு உள்ளதா இல்லையா என்ற விவரம் அவர்கள் வந்து சொன்னதால் தான் தெரியும் என்றால் சரிதான். வாதி தரப்பிலும் சரி, பிரதிவாதிகள் தரப்பிலும் சரி தக்க தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் பச்சையப்பன் தனது சொந்த வருமானத்தில் வாங்கி அனுபவித்து வந்த சொத்துக்கள் என்றால் சரியல்ல, நாங்களும் சேர்ந்து உழைத்து வாங்கிய சொத்துக்கள் தான்.

**6**). வழக்கு சொத்துக்கள் அனைத்தும் 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அமுதா ஆகியோரின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றும், எனக்கும் என் உடன் பிறந்தவர்களுக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல, நான் பாதி அனுபவித்து வருகிறேன். என் அனுபவத்தில் உள்ளது என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை, ஆனால் என் மகன்களை கேட்டால் தான் தெரியும். பாதி சொத்து அனுபவித்து வருவதாக கூறியுள்ளபட்சத்தில், பாதி சொத்திற்கும் மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா, அல்லது முழு சொத்திற்கும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் முழு சொத்திற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் மற்றும் அந்த சொத்தை பிரதிவாதிகள் விற்பனை செய்தது செல்லாது என்றும் கேட்டுள்ளேன்.

**7**). 11.12.1980ம் தேதி 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அமுதா ஆகியோர்களின் தாயார் முனியம்மாள் என்பவர் பெயருக்கு பச்சையப்பன் இந்த வழக்கின் 6 மற்றும் 9 அயிட்ட சொத்துக்களை தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் பச்சையப்பன் முனியம்மாளை 'நீ எனது மனைவி என்றும், அதனால் இந்த ஆவணத்தை எழுதி தருகிறேன்' என்று குறிப்பிட்டு எழுதியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**8**). மேற்படி பச்சையப்பன் எனக்கோ, என் உடன் பிறந்தவர்களுக்கோ அல்லது எனது தாயாருக்கோ ஏதேனும் ஆவணம் எழுதி வைத்தாரா என்றால் எனது தாயாரும் எனது உடன் பிறந்தவர்களும் மலேசியாவில் இருந்ததால் அவர் எழுத முடியவில்லை. நான் கொவளை கிராமத்தில் இருந்ததாக கூறியுள்ளபட்சத்தில், ஏன் என் பெயரிலும் கூட பச்சையப்பன் ஆவணம் எழுதவில்லை என்றால் எழுதி வைக்கிறேன் என்று கூறினார், அவரிடம் பணம் இல்லாததால் எழுத முடியவில்லை. 11.12.1980 தேதியிட்ட தான செட்டில்மெண்ட்படி முனியம்மாள் அவரது பெயரில் பட்டா சிட்டா மாற்றம் செய்து அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு 2018ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**9**). 1980ல் ஏற்படுத்தப்பட்ட ஆவணத்திற்கு 38 ஆண்டுகள் கழித்து செல்லாது என பரிகாரம் கேட்க முடியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 24.12.1991ம் தேதியில் 1 முதல் 4 பிரதிவாதிகள், முனியம்மாள் மற்றும் அமுதா ஆகியோர் சேர்ந்து வழக்கின் 4வது அயிட்ட சொத்தான 76 1/2 சென்ட் மற்றும் 5ம் அயிட்ட சொத்தான 98 சென்ட் ஆகியவற்றை 5ம் பிரதிவாதி விஸ்வநாதன் என்பவருக்கு அவர்களது குடும்ப செலவிற்காக விற்பனை செய்து விட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி தேதியிட்ட ஆவணத்தில் கிணறு விடுபட்டு போய்விட்டது என்பதால் மேற்படி நபர்கள் 29.01.1993ல் ஒரு பதிவு செய்யப்படாத கிரய ஆவணம் மேற்படி 5ம்

பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

**10).** 5ம் பிரதிவாதி விஸ்வநாதன் மேற்படி கிரயம் பெற்ற சொத்துக்களை அனுபவித்து வந்து 04.12.2006 தேதியில் திருவேங்கடம் என்பவருக்கு கிரயம் செய்துக் கொடுத்தார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி திருவேங்கடம் சொத்துக்களை அனுபவித்து வந்து அவரது மகன் 7ம் பிரதிவாதி தரணி என்பவருக்கு 24.10.2007ல் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி 7ம் பிரதிவாதி தரணி 07.11.2014ல் மேற்படி சொத்துக்களை அவரது தாயாரான 6ம் பிரதிவாதி விஜயா என்பவருக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தான 4ம் அயிட்ட சொத்து 76 1/2 சென்ட்டும், 5ம் அயிட்ட சொத்து 98 சென்ட்டும் தற்போது 6ம் பிரதிவாதி விஜயா தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

**11).** மேற்படி இரண்டு அயிட்ட சொத்துக்களுக்கான வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா அனைத்தும் விஜயா பெயரில் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 24.12.1991 தேதியிட்ட கிரய ஆவணத்தை 28 ஆண்டுகள் கழித்தும், 4.12.2006 தேதியிட்ட ஆவணத்தை 13 ஆண்டுகள் கழித்தும், 7.11.2014 தேதியிட்ட ஆவணத்தை 5 ஆண்டுகள் கழித்தும் செல்லாது (Null and void) என கால தாமதமாக பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. ஆவணங்கள் எழுதப்பட்டு 3 ஆண்டுகளுக்குள் பரிகாரம் கேட்கவேண்டும் என்றால் சரியல்ல. சொத்திற்கு உரிமை மூல பரிகாரமும் கால தாமதமாக கேட்க முடியாது என்றால் சரியல்ல.

**12).** வழக்கு சொத்துக்களுக்கு பதிவு துறை ஆவணங்களோ, வருவாய் துறை ஆவணங்களோ என் பெயரிலோ, என் குடும்பத்தார் பெயரிலோ இல்லாத நிலையில் உரிமை விளம்புகை பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. நான் பச்சையப்பனின் மகன் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த ஆவணங்களிலேயே வழக்கு சொத்துக்களின் மதிப்பு உள்ளது என்றும், அதை மறைத்து குறைவாக மதிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சரியான மதிப்பு குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தால் இந்த நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் வராது என்றும், அதற்கு மேல் உள்ள நீதிமன்றத்திற்கு தான் அதிகாரம் உண்டு என்றால் சரியல்ல.

**13).** 6,7 பிரதிவாதிகளான விஜயா மற்றும் தரணி ஆகியோருக்கு முருகன்

என்ன உறவு என்றால் விஜயாவின் தம்பி ஆவார், தரணிக்கு மாமா ஆவார். வழக்கு சொத்தில் இருந்து வெளியே செல்லுமாறு மேற்படி விஜயா, தரணி, முருகன் ஆகியோரை தடியால் தாக்கினேன் என்றும், அது சம்பந்தமாக குற்ற வழக்கு நடந்து வருகிறது என்றால் அது பொய் வழக்கு ஆகும். வழக்கு தவறான வழக்கு என்றும், அதனால் பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**Ending time : 1.43 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.